Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No. 194/2022**

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | ஹவுஸ் கீப்பிங் |
| பெயர் | - | ஆனந்த் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அருமைநாயகம் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 42 |
| சாதி | - | | | | |

**23.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1. நான் வால்பாறை கக்கன் காலனியில் வசித்து ஹவுஸ் கீப்பிங் தொழில் செய்து வருகிறேன். கக்கன் காலனியில் 4 மாடிக்குடியிருப்பில் 2-வது தளத்தில் வசித்து வருகிறேன். அந்த தெருவிலிருக்கும் பசங்கள் எனது வீட்டின் மொட்டை மாடியில் அடிக்கடி வந்து விளையாடுவார்கள்.

2. விளையாடும்போது பயங்கர சத்தம் இருக்கும்போது வீட்டில் டிஸ்டரப் ஆகிறது. அதனால் ரொம்ப எமோஸனாகிறது. மனதளவில் பாதிக்கப்பட்டேன். அதனால் பசங்களிடம் பலமுறை எச்சரித்தேன். அதேபோல் 24.12.2020 அன்று மதியம் 02.00 மணியளவில் அதேமாதிரி விளையாடும்போது இங்க விளையாடக்கூடாது என்று விரட்டிவிட்டேன்.

3. அந்த சிறுவர்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் நான் அடித்ததாக சொல்லி பெற்றோரை எனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். ரமேஷ், பக்கத்தில் இருந்த 2 பசங்களின் பெற்றோர்கள் எனது வீட்டிற்கு மாலை 06.00 மணிக்கு வந்தார்கள். இந்த மாதிரி வரும்போது பாரத்சேனாவை சேர்ந்த அன்பழகன் என்பவரை அழைத்து வந்தார்கள்.

4. நாங்கள் பேசிக்கொண்டே இருக்கும்போது அன்பழகன் என்னை ஓங்கி இடது கன்னத்தில் அரைந்தார். அதுமட்டுமல்லாமல் ரொம்ப மோசமான கெட்ட வார்த்தையால் தேவடியா மகனே, கேனப் புண்ட என்று திட்டினார். இதுபோன்று நிறைய அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். அதோடு உன்னை கொல்றனா இல்ல பாருடா என்று சொன்னார். அதனால் ஓங்கி அடித்த வலியிருந்த காரணத்தால் வால்பாறை GH சென்று சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

5. மறுநாள் 25.12.2020 அன்று வால்பாறை போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும்.** என்னை அடித்து, கெட்டவார்த்தையால் திட்டியவரை அடையாளம் காட்டமுடியும்.

(எதிரி ஆஜரில்லை என்பதால் எதிரியை அடையாளம் காட்டுவதற்காக அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் முதல் விசாரணையில் தொடர்ச்சி வேறொரு நாளைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.